DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 1/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.7

Accused A2 present. A1 absent. Petition filed and allowed.

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. விசாலாட்சி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 27th day of January, 2026.

(இந்த சாட்சி விசாரணை காணொலி பதிவு செய்யப்படுகிறது.

ஒருமுனையில் நீதிபதியும், காணொலியின் நீதிமன்ற ஊழியர்கள், அரசு தரப்பு வழக்கறிஞர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆகியோர்கள் இருக்கிறார்கள். காணொலியின் மற்றொரு முனையில் சாட்சி விசாலாட்சி இவ்வழக்கில் சாட்சி 7 ஆக சாட்சியம் வழங்க தயாராக உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் சம்மதத்தின் பேரில் விசாரணை பதிவு செய்யப்படுகிறது)

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை, தடய அறிவியல் துறையில் இயக்குநராக முழு கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.04.2018 ம் தேதி அன்று நான் அதே துறையில் வேதியியல் பிரிவில் உதவி இயக்குநராக பணியிலிருந்தபோது விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் குற்ற எண் 06/2018 வழக்கு சம்பந்தப்பட்ட வழக்கின் சொத்துக்கள் அடங்கிய உடைபடாத நீதிமன்ற முத்திரையுடன் கூடிய அட்டைப்பெட்டி ஒன்று மற்றும் 24.04.2018 தேதியிட்ட நீதிமன்ற கடிதத்துடன் மு.நி.காவலர் திரு.ராஜா

உசேன் எண் 1177 என்பவர் மூலம் எங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது.

அவற்றிற்கு வேதியியல் எண் 194/2018 வழங்கப்பட்டது. முத்திரை நீதிமன்ற கடிதத்தில் கொடுக்கப்பட்டிருந்த மாதிரி முத்திரையுடன் ஒப்பீட்டு பார்த்ததில் முழுமையாகவும் சரியாகவும் இருந்தது.

வழக்கு சொத்துக்களின் விபரங்கள்

விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2018 பிஆர் எண் 13/2018 அயிட்டம் எண் 2,3,4 என்று குறிக்கப்பட்ட லேபில் ஒட்டப்பட்ட முத்திரையிடப்பட்ட அட்டைப்பெட்டியை பிரிக்கும்போது அவற்றில் 3 வழக்கு சொத்துக்கள் இருந்தன. அவ்விதம் முறையே

**அயிட்டம் 1–** ஒரு மூடி முத்திரையிடப்பட்ட கண்ணாடி பாட்டிலில் 180 மில்லி அளவுள்ள இளம் சிவப்பு நிற கரைசல் இருந்தது. பாட்டிலின் மீது ஒட்டப்பட்டிருந்த லேபிளில் விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2018. 2ம் எதிரி தியாகராஜன் அவர்களின் வலது கை விரல்கள் கழுவிய கரைசல், பிஆர் எண் 13/2018 என்று குறிக்கப்பட்டிருந்தது.

**அயிட்டம் 2 –** ஒரு மூடி முத்திரையிடப்பட்ட கண்ணாடி பாட்டிலில் 180 மில்லி அளவுள்ள இளம் சிவப்பு நிற கரைசல் இருந்தது. பாட்டிலின் மீது ஒட்டப்பட்டிருந்த லேபிளில் விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2018. 2ம் எதிரி தியாகராஜன் அவர்களின் இடது கை விரல்கள் கழுவிய கரைசல், பிஆர் எண் 13/2018 என்று குறிக்கப்பட்டிருந்தது.

**அயிட்டம் 3 –** ஒரு மூடி முத்திரையிடப்பட்ட கண்ணாடி பாட்டிலில் 180 மில்லி அளவுள்ள இளம் சிவப்பு நிற கரைசல் இருந்தது. பாட்டிலின் மீது ஒட்டப்பட்டிருந்த லேபிளில் விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2018. 2ம் எதிரி தியாகராஜன் அவர்களின் சாம்பல் நிற பேண்டின் இடதுபுற உள்பக்க பாக்கெட் கழுவிய கரைசல் பிஆர் எண் 13/2018 என்று குறிக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட 3 வழக்கு சொத்தில் உள்ள கரைசல்களை தனித்தனியாக

துணை இயக்குநர் அவர்களின் மேற்பார்வையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் பினாப்தலின் மற்றும் சோடியம் கார்பனேட் என்ற வேதிப்பொருட்கள் அயிட்டம் 1, 2, 3 ல் உள்ள கரைசல்களில் இருப்பது கண்டறியப்பட்டது. பரிசோதனை விபரங்கள் ஆய்வறிக்கையில் உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பகுப்பாய்வு அறிக்கை வேதியியல் எண் 194/2018 நாள் 30.04.2018 அன்று தயார் செய்து நானும் துணை இயக்குநர் வசந்த சுந்தரி அவர்களும் கையொப்பம் இட்டோம். ஆய்வறிக்கை மற்றும் பரிசோதனைக்கு உபயோகப்படுத்தியது போக மீதமுள்ள கரைசல்கள் அடங்கிய பாட்டில்களை எங்கள் ஆய்வக முத்திரையுடன் 30.05.2018 அன்று மு.நி.கா. பால்மரிய ஜோசப் ராஜ் என்பவர் மூலம் நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது. அந்த ஆய்வறிக்கை அசாஆ 28 ஆகும். இது சம்பந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**1,2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் ஆய்வகத்திற்கு வரப்பெற்ற சான்று பொருட்கள் எந்த தேதியில் குற்றவாளிகளிடமிருந்து பரிசோதனை செய்யப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்னது போன்று எங்கள் ஆய்வகத்திற்கு இந்த வழக்கு சம்பந்தமாக எந்தவித கரைசல் பரிசோதனையும் அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. பாட்டில்கள் எதையும் கரைசல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. என்னால் அளிக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை விஞ்ஞான ரீதியாக முழுமையான அறிக்கை இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

காணொலி முனையில் சாட்சி சொல்லச்சொல்ல தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சரிபார்த்து பிழைகளை சரிசெய்து மீண்டும் சாட்சியிடம் வாசித்து காண்பித்து சாட்சி சரியாக உள்ளதாக ஒப்புக்கொண்டார், அதனை

உறுதிபடுத்தியபின்ப அது குறித்து சான்றிழிக்கும் வகையில் நீதிபதியாக என்னால் கையெழுத்து இடப்படுகிறது. சாட்சிக்கு E-mail மூலம் அனுப்பிவைக்கப்படுகிறது. அதில் சாட்சி கையெழுத்து செய்து அதனை Scan நீதிமன்றத்திற்கு அன்றைய தினமே E-mail மூலம் திருப்பி அனுப்பி வைக்கவேண்டும் என்றும், சாட்சியத்தின் மற்றொரு நகலை எடுத்து துறைதலைவர் முன்னிலையில் சாட்சி கையெழுத்திட்டு மேற்படி அதிகாரி சான்றொப்பத்தை பெற்று நீதிமன்றத்திற்கு தபாலில் அனுப்பிவைக்கவேண்டும் என்று சாட்சிக்கு அறிவுறுத்தப்படுகிறது.

<u>சாட்சியின் கையெழுத்து -</u>

| |
|---|
| Taken down by me in open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.<br><br>Principal District and Sessions Judge,<br>Virudhunagar District at<br>Srivilliputtur. |

Remote side Co-ordinator Signature